# சேலம் மாநகராட்சி

**திட்டப்பணிகள் விபரம்**

# சேலம் மாநகராட்சி

## திருமணிமுத்தாறு அபிவிருத்தி திட்டம் – நிலை II

**திட்ட மதிப்பீடு ரூ. 31.50 கோடி**

சேலம் மாநகராட்சியின் திருமணிமுத்தாறு அபிவிருத்தி திட்டம் நிலை II ன் கீழ் ரூ. 31.50 கோடி மதிப்பீட்டில் திருமணிமுத்தாறு அபிவிருத்தி, வெள்ளக்குட்டை ஓடை அபிவிருத்தி மற்றும் மூன்று இடங்களில் பாலங்கள் அமைத்திடவும் அரசு ஆணை எண். 85 நாள்: 6.9.2006 ன் மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் நிதி நிறுவனத்தின் மூலம் 60% கடன் 30% மான்யம் 10% மாநகராட்சியின் நிதியாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மேற்படி திட்டத்திற்கான நிதி ஆதாரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | TNUIFSL கடன் தொகை | – | ரூ. | 18.50 கோடி |
| 2. | TNUIFSL மான்யம் | – | ரூ. | 9.85 கோடி |
| 3. | மாநகராட்சி பங்கு தொகை | – | ரூ. | 3.15 கோடி |
| | **மொத்தம்** | – | ரூ. | 31.50 கோடி |

மேற்கண்ட 9 பேக்கேஜ்களை நிறைவேற்ற 26.04.2007ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மூன்றாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுத் தொகையைவிட 25 முதல் 26 சதவீதம் கூடுதலாக வரப்பெற்றதால் நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி மதிப்பாய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு மேற்படி குழு 12.07.2007 மற்றும் 28.07.2007 ல் மேற்படி பணியை செயல்படுத்த மன்றம் தனது 30.07.2007ம் தேதிய 191 முதல் 199 வரையிலான தீர்மான எண்களில் 9 கட்ட பணிகளுக்கும் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் குறைந்த ஒப்பந்ததாரர் மெசர்ஸ் பாலாஜி இன்டஸ்ட்ரியல் & அக்ரிகல்சுரல் காஸ்டிங்ஸ் என்ற நிறுவனத்திற்கு 22–9–2007ம் தேதியன்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. 10–10–2007ல் பணி துவங்கி நடைபெற்று வருகிறது இதுவரை ரூ.1760 லட்சம் மதிப்பீட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. அனைத்து பணிகளுக்ம டிசம்பர் 2010க்குள் நிறைவேற்றி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## பேக்கேஜ் –1 அணைக்கட்டு பகுதி பணி துவங்குவதற்கு முன்



## பேக்கேஜ் –1 அணைக்கட்டு பகுதி பணி முடிவுறும் நிலை



**பேக்கேஜ் – 2 அப்சரா பாலம் முதல் செவ்வாய்பேட்டை பாலம் வரை பணி துவங்குவதற்கு முன்**



**பேக்கேஜ் – 2 அப்சரா பாலம் முதல் செவ்வாய்பேட்டை பாலம் வரை பணி நடை பெறும் போது**



**பேக்கேஜ் – 3 செவ்வாய்பேட்டை பாலம் முதல் காளியம்மன் கோவில் பாலம் வரை பணி துவங்கும் முன்**



**பேக்கேஜ் – 3 செவ்வாய்பேட்டை பாலம் முதல் காளியம்மன் கோவில் பாலம் வரை பணி நடைபெறும் போது**



**பேக்கேஜ் – 4 செவ்வாய்பேட்டை காளியம்மன் கோவில் பாலம் முதல் அணைக்கட்டு வரை பணி துவங்குவதற்கு முன்**



**பேக்கேஜ் – 4 செவ்வாய்பேட்டை காளியம்மன் கோவில் பாலம் முதல் அணைக்கட்டு வரை பணி நடைபெறும் போது**



**பேக்கேஜ் – 5 வெள்ளக்குட்டை ஓடை ஈசன் பில்டிங்முதல் கருவாட்டு பாலம் வரை துவங்கும் முன்.**




**பேக்கேஜ் – 5 வெள்ளக்குட்டை ஓடை ஈசன் பில்டிங்முதல் கருவாட்டு பாலம் வரை பணி நடைபெறும் போது.**



**பேக்கேஜ் – 6 கருவாட்டு பாலம் முதல் போஸ் மைதானம் வரை வெள்ளக்குட்டை ஓடை அபிவிருத்தி பணி துவங்கும் முன்.**




**பேக்கேஜ் – 6 கருவாட்டு பாலம் முதல் போஸ் மைதானம் வரை வெள்ளக்குட்டை ஓடை அபிவிருத்தி பணி நடைபெறும் போது.**



பேக்கேஜ் – 7 பழைய பேருந்து நிலையம் அருகில் பாலம் கட்டுதல் பணி துவங்கும் முன்.



பேக்கேஜ் – 7 பழைய பேருந்து நிலையம் அருகில் பாலம் கட்டுதல் பணி முடிவுறும் நிலை.



**பேக்கேஜ் – 8 குண்டுபோடும் தெரு அருகில் பாலம் கட்டுதல் பணி துவங்கும் முன்.**



**பேக்கேஜ் – 8 குண்டுபோடும் தெரு அருகில் பாலம் கட்டுதல் பணி முடிவுறும் நிலை.**



**பேக்கேஜ் – 9 ஆக்ஸ்போர்டு பள்ளி அருகில் தரைபாலத்தை அகற்றி புதிய பாலம் கட்டுவதற்கு முன்.**



**பேக்கேஜ் – 9 ஆக்ஸ்போர்டு பள்ளி அருகில் தரைபாலத்தை அகற்றி புதிய பாலம் கட்டப்பட்டு பணி முடியும் நிலை.**



# பாதாள சாக்கடை திட்டம்

சேலம் மாநகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்தினை செயல□படுத்த அரசு ஆணை எண் 60 (டி), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்□கும் (ந.நி.3) துறை, நாள்.23.2.2006ல் ரூ.149.39 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்□கியுள்ளது. மேற்படி அரசாணையில் இத்திட்டத்தினை செயல்படுத்த தேவையான நிதி ஆதாரத்தினை தமிழ்நாடு அடிப்படை வசதிகள் உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் மூலம் பெற்று செயல்படுத்த கீழ□கண்டுள□ளவாறு அனுமதி வழங்□கப்பட்டுள்ளது.

**திட்டத்தின் நிதி ஆதாரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசு மானியம்/டி.என்.யூ.டி.பி III | : | ரூ. 10.00 கோடி |
| 2. | மாநகராட்சி மற்றும் பொது மக்களின் பங்□கு தொகை | : | ரூ. 78.85 கோடி |
| 3. | கடன் (டி.என்.யூ.டி.பி III) | : | ரூ. 60.54 கோடி |
| | **மொத்தம்** | : | **ரூ. 149.39 கோடி** |

மேற□படி திட்டத்தில□ பாதாள சாக்கடை பணிக்கான குழாய□ பதிக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி 28.06.07 பெறப்பட்டது . உலக வங்□கி நிறுவனமான டிஎன□யுடிபி ஒப்பந்தபுள□ளி நமூனாவிற□கு 09.10.07 ல□ ஆட்சேபணை இன□மை சான□று பெறப்பட்டது . பணிநிறைவேற□ற கீழ□கண்ட தேதிகளில□ ஒப்பந்தபுள□ளிகள□ கோரப்பட்டது.

பாதாள சாக்கடை திட்டத்தின் கழிவு நீர் குழாய் பதிக்கும் பணிக்கான மூன்று பேக்கேஜ்களுக்கும் நான்கு முறை ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டும் தகுதியான ஒப்பந்ததாரார்கள் வரப்பெறவில்லை என்பதால் ஐந்தாம் அழைப்பு 20.08.10ல் கோரப்பட்டதில் வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் பேக்கேஜ் –1 மற்றும் 3 வது பேக்கேஜ்களுக்கு தொழில் நுட்ப தகுதி வாய்ந்த Ms.PSVCPL-BBIPL-(JV) ஹைதராபாத் நிறுவனத்திற்கு பணிஆணை வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

பேக்கேஜ். 2க்கான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு 6 முறை கோரியும் தகுதி வாய்ந்த ஒப்பந்தபுள்ளி வரப்பெறாததால் 7ம் அழைப்பு 24.06.10ல் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில் நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியான ஒப்பந்ததாருக்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

**நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் (DBOT)**

பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்கள்

1) வெள்ளக்குட்டை 2) வண்டிப்பேட்டை 3) மான்குட்டை 4) அணைமேடு ஆகும். மேற்படி நான்கு இடங்களில் வெள்ளக்குட்டை, வண்டிப்பேட்டை மற்றும் அணைமேடு ஆகிய மூன்று இடங்களில் சுத்திகரிப்பு நிலையம் DBOT முறையில் அமைத்திட ஒப்பந்தபுள்ளிகள் 10.02.10ல் வரவேற்பப்பட்டதில் மூன்று பேக்கேஜ்களுக்கும் வரப்பெற்ற 37 ஒப்பந்தபுள்ளி நிறுவனங்களின் தொழில்

நுட்ப தகுதிகள் ஆய்வு செய்திடும் பணியினை தமிழ்நாடு தண்ணீர் முதலீட்டு கழகம் சென்னை அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை நகராட்சி நிர்வாக தொழில் நுட்ப நிலை குழு கூட்டத்தில் வைத்து முடிவு பெறப்பட்டு, உலக வங்கியுன் ஒப்புதல் பெறப்பட்டு விட்டதால் மேற்படி மூன்று பேக்கேஜ்களுக்கான பணிகளுக்கு பணி ஏற்பு கடிதம் வழங்கப்படவுள்ளது. மேலும் பேக்கேஜ் 3ல் மான்குட்டை பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் DBOT முறையில் அமைத்திட 21.07.10ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 8 நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டு வருகிறது.

------

| | | |
|---|---|---|
| பயனடையும் கோட்டங்கள் | : | 54 |
| பயனடையும் மக்கள் தொகை | : | 5.67 லட்சம் |
| திட்டம் வடிவமைப்பு காலம் | : | 30 ஆண்டுகள் |
| திட்ட அடிப்படை ஆண்டு | : | 2010 |
| மக்கள் தொகை | : | 8.20 லட்சம் |
| 2025ல் இடைக்கால மக்கள் தொகை | : | 10.52 லட்சம் |
| 2040ல் உச்சகட்ட மக்கள் தொகை | : | 13.24 லட்சம் |
| சுத்திகரிக்கப்படும் கழிவு நீர் ஒரு நபர் நாளொன்றுக்கு | : | 90 லிட்டர் |
| மொத்த கழிவு நீர் அளவு | : | 59 மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு |
| அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சேகரிப்பு குழாயின் மொத்த நீளம் | : | 418 கி.மீட்டர் |
| வழங்கப்படவுள்ள கழிவு நீர் குழாய் இணைப்புகள் | : | 90 ஆயிரம் |







## தனிக்குடிநீர் திட்டம்

**திட்ட மதிப்பீடு ரூ.168.00 கோடி**
**<u>திருத்திய திட்ட மதிப்பீடு ரூ.283.09 கோடி.</u>**

சேலம் மாநகராட்சியின் பொதுமக்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீர் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் தேவையான அளவு குடிநீர் வழங்கிட தனியான ஒரு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட அரசு ஆணை எண். 127 நாள் 11.09.2007 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் இத்திட்டத்தினை செயல்படுத்த திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து வழங்க தமிழ்நாடு தண்ணீர் முதலீட்டுக் கழகம் சென்னை (TWIC) அவர்களை நியமனம் செய்யப்பட்டதின் அடிப்படையில் மேற்படி நிறுவனத்தார் இத்திட்டதிற்கு ரூ 168..00 கோடிக்கு மதிப்பீடுகள் தயார் செய்து வழங்கினார்கள்.

மேற்படி மதிப்பீட்டிற்கு கண்காணிப்பு பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களது தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு மேற்படி மதிப்பீடுகளை தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனம், சென்னை அவர்கள்மூலம் உலக வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மேற்படி மதிப்பீடுகளை உலக வங்கியால் ஆய்வுசெய்யப்பட்டு தொழில் நுட்ப ரீதியாக மதிப்பீட்டில உள்ள பி,எஸ்.சி (P.S.C. Pipe) குழாய்களுக்கு பதிலாக எம். எஸ் (M.S.Pipe) குழாய்களாக மாற்றி அமைத்திட கருத்து வழங்கினார்களா. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் உலக வங்கியின் கருத்தின் படி மதிப்பீடு தயாரித்து வழங்க திட்ட ஆலோசகர், தமிழ்நாடு தண்ணீர் முதலீட்டு கழகம் (TWIC) சென்னை நிறுவனத்திடம் கோரப்பட்டது.

இதன்பேரில் தண்ணீர் முதலீட்டு கழகத்தினர் 2009–10ம் ஆண்டு திருத்திய விலை விகிதத்தின் அடிப்படையில் விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டதால் திட்ட மதிப்பீடு ரூ.168.00 கோடியிலிருந்து ரூ.283.09 கோடியாகிவிட்டது.

மேற்படித் திட்டத்தின் ரூ.115.09 கோடி கூடுதல் செலவினத்தை சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள் கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தில் (UIDSSMT) வழிவகை செய்து நிதி ஒதுக்கீடு அளிக்க கோரி 30.01.2009ம் தேதிய 439 எண் கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில் அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டு நிதி உதவி கிடைக்கப் பெறாததாலும், அரசாணை எண்.127ல் வழிவகை செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வீடு மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டம் மூலம் நகர்புற குடிசைப்பகுதிகளுக்கு குடிநீர் திட்டத்திற்கு ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ள ரூ.20.00 கோடியும் கிடைக்கப்பெறாததால் பற்றாக்குறை ரூ.135.09 கோடியினை தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித்திட்டம் III மற்றும் இதர அரசு மான்யத்தின் மூலம் நிதி ஒதுக்கீட்டிற்கு வழிவகை செய்து திருத்திய மதிப்பீடு ரூ.283.09 கோடி மதிப்பீட்டிற்கு திருத்திய நிர்வாக அனுமதி அளிக்க கோரி மன்றம் தனது 30.12.2009ம் தேதிய 232 எண் கொண்ட தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் அரசுக்கு பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டு அரசு தனது 30.12.2009ம் தேதிய 258 எண் கொண்ட அரசாணையில் கீழ்க்கண்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் விவரப்படி மேற்படி திட்டத்தை செயல்படுத்த திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண். | நிதி ஆதாரம் | திருத்திய நிர்வாக அனுமதித்த பின் நிதி ஆதாரம் ரூ. (கோடியில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் –III ல் பெறப்படும் தொகை | 58.00 |
| 2. | குடிநீர் இணைப்புகளின் வைப்புத் தொகை மற்றும் குடிநீர் வரி மூலம் சேலம் மாநகராட்சியின் பங்களிப்பு | 35.00 |
| 3. | பழைய குடிநீர் திட்டத்தை ஒப்பளிப்பு செய்வதன் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பங்களிப்பு | 5.00 |
| 4. | உள் கட்டமைப்பு நிதி மற்றும் கேளிக்கை நிதி ஆகியவற்றிற்கு இரண்டு ஆண்டுக்கான மானியம் | 25.00 |
| 5. | தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் – III ன் மானிய நிதி–I ன் மான்யம் | 25.00 |
| 7. | திருத்திய கட்டமைப்பு மான்யத்திலிருந்து கூடுதல் மான்யம் | 135.09 |
| | **மொத்தம்** | **283.09** |

மேற்படி அரசாணை எண்.258 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள்.30.12.2009ல் ரூ.283.09 கோடிக்கு திட்டம் அனுமதிக்கப்பட்டதின் அடிப்படையில் மேற்படி திட்ட மதிப்பீட்டில் முதற்கட்டமாக ரூ.188.42 மதிப்பீட்டில் செயல்படுத்த 5 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணியினை நிறைவேற்ற தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளிகள் 05.05.10ம் தேதியில் வரவேற்கப்பட்டதில் மொத்தம் 5 சிப்பங்களுக்கும் சேர்த்து 77 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு சரித்தன்மை தகுதி ஆராய்வு செய்து மாநில அளவிலான ஒப்பந்த வழங்கல் குழுவின் அனுமதி பெறப்பட்டு உலக வங்கயின் ஒப்புதல் பெறப்பட்டு 5 சிப்பங்களுக்கான பணி மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரருக்கு 05.08.10ல் பணி ஏற்பு ஆணை வழங்கப்பட்டு 11.08.10ல் பணி துவங்கப்பட்டு விட்டது. மேற்படி பணி இரண்டு ஆண்டுகாலத்திற்குள்ள பணி நிறைவேற்றி முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது . மேற்படி திட்டத்தினால் சேலம் மாநகர அனைத்து பகுதிகளுக்கும் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் தண்ணீர் கிடைக்கும்

## ஒருங்கிணைந்த குடிசைப்பகுதி குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்

### மொத்த மதிப்பீடு ரூ. 1558.24 இலட்சம்

சேலம் மாநகராட்சியின் நான்கு மண்டலங்களில் 113 அங்கீகரிக்கப்பட்ட குடிசை பகுதிகள் உள்ளன. மேற்படி குடிசைச் சார்ந்த பகுதிகளை குடிசைகளே இல்லாத நகரமாக உருவாக்கும் பொருட்டு மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்புடன் **ஒருங்கிணைந்த குடிசைப் பகுதி குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ( Integrated Housing and Slum Development Programme – IHSDP )** சேலம் மாநகராட்சியில் முதற் கட்டமாக 12 குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு கீழ்கண்டுள்ள விபரப்படி தனிக்குடியிருப்புகள் கட்டுதல், அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு பணிகளை செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மொத்த மதிப்பீடு (ரூ. இலட்சம்) | அரசு மான்யம் (ரூ. இலட்சம்) | | மொத்தம் (ரூ. இலட்சம்) |
|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய அரசு பங்களிப்பு | மாநில அரசு பங்களிப்பு | |
| 1 | தனிக் குடியிருப்புகள் கட்டுதல் | 1006 | 1026.12 | 643.84 | 382.28 | 1026.12 |
| 2 | அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் | 77 | 532.12 | 282.42 | 249.70 | 532.12 |
| | **மொத்தம்** | **1083** | **1558.24** | **926.26** | **631.98** | **1558.24** |

மேற்படி திட்டத்தில் தனிக்குடியிருப்புகள் கட்ட ஒவ்வொரு குடியிருப்பிற்கும் மத்திய அரசு மான்யம் ரூ. 64,000, மாநில அரசு மான்யம் ரூ. 8,000 மற்றும் பயனாளிகளின் ப§களிப்பு ரூ 30,000 என்ற விகிதத்தில் ஆக மொத்தம் ரூ. 1,02,000 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது 1006 பயனாளிகளுக்கு தனிக் குடியிருப்புகள் கட்ட பணி ஆணை வழ§கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டத்தில் முதற் கட்டமாக அரசு மான்யம் ரூ. 628.22 இலட்சம் பெறப்பட்டு மேற்படி தொகையில் 645 பயனாளிகளுக்கு தனிக் குடியிருப்புகள் கட்டும் பணியில் வெவ்வேறு நிலைகளில் நாளது தேதி வரை ரூ.300.60 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள குடியிருப்புகள் 2011ம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிவடைய உள்ளன.

மேலும் மேற்படி குடிசைப் பகுதிகளில் 77 எண்ணிக்கையில் அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு பணிகளை அரசு மான்யம் ரூ. 532.12 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டு முதல் கட்டமாக 29 எண்ணிக்கையில் ரூ. 239.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 48 பணிகளான குடிநீர் இணைப்பு மற்றும் கழிவுநீர் குழாய் இணைப்புகள் ஆகியன விரைவில் தொட§க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### இத்திட்டம் செயல்படுத்த மாநகராட்சி மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள்

**1.** மேற்படி திட்டத்தில் தனிக்குடியிருப்புகள் கட்டும் பயனாளிகளுக்கு மிகக் குறைந்த வட்டி விகிதத்திலும், சுலப தவணையிலும் முதல் கட்டமாக ரூ. 20,000 வரை

அரசுடைமையாக்கப்பட்ட வங்கி மேலாளர்களுடன் கலந்தாலோசித்து கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**2.** பயனாளிகளுக்கு தனிக்குடியிருப்புகள் கட்ட சிமெண்ட் மூட்டைகள் அரசு நிர்ணய விலையில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**3.** பயனாளிகளை சுய உதவிக்குழு உறுப்பினர்களாக்கி ஸ்வர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ், நடைமுறையில் உள்ள திட்டகளின் மூலம் பயன்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4.** பயனாளிகளிடம் கல்வி, மருத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.





## <u>சேலம் மாநகராட்சி</u>
## <u>திடக்கழிவு மேலாண்மைத்திட்டம்</u>

சேலம் மாநகராட்சி 91.34 ச.கி.மீ. பரப்பளவு கொண்டதாகும் தறபோது தினந்தோறும் 350 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகிறது. சேகரம் செயயும் திடக்கழிவுகளை எருமாபாளையம் பகுதியில கொட்டப்பட்டு வருகிறது. இந்த இடம் 28 ஏக்கர் நிலப்பரப்பாகும். இந்த இடத்தில குப்பைகள பல ஆண்டுகளாக கொட்டப்பட்டு வருவதால சுமார்  30 அடி உயரத்திறகு குப்பைகள தேங்கி உளளது. இதனால சுகாதார கேடுகள ஏறபடுவதால மக்கள நலன கருதியும், உயர்நீதி மனற தீர்ப்பின அடிப்படையிலும் திடக்கழிவுகளை நவீன விஞஞான முறையில சேகரித்து கையாள அறிவுரைகள வழஙகப்பட்டதறகு ஏறப இம்மாநகரத்தில சேகரமாகும் எலலா திடக்கழிவுகளையும் ஒரே இடத்தில கொண்டு சென்று நவீன விஞஞான முறையில குப்பைகளை தரம் பிரித்து கையாளுவதறகு ஏறறபடி செட்டிச்சாவடி ஊராட்சி பகுதியில 100 ஏக்கர் நிலம் புல எண். 6/1 மறறும் புல எண். 6 ல அரசாணை நிலை எண் 127 வருவாய ( நி.மு.7) துறை நாள 13.7.2007னபடி மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. மேறபடி திடக்கழிவு மேலாண்மை வளாகத்திறகு செலலும் அணுகு சாலையினை மேம்படுத்த மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ரூ. 4.51 கோடி மதிப்பீட்டில பணிகள எடுக்கப்பட்டு நடைபெறறு வருகிறது.

மாநகராட்சி பகுதியில சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை உயர்நீதி மனற வழிகாட்டுதலினபடி நவீன விஞஞான முறையில தரம் பிரித்து உரமாக மாறறவும், இதர உபயோக பொருட்களை தயார் செயயவும், எஞசிய திடக்கழிவுகளை பாதுகாப்பான முறையில நிலத்தடி நீர் மாசு ஏறபடாத வகையில நிரப்புவதறகும், இத்திட்டத்தினை கட்டி, இயக்கி உரிமம் மாறறுதல முறையில ( BOOT Basis ) செட்டிசாவடி பகுதியில செயலபடுத்த ஒப்பந்தப்புளளிகள 25.11.2008ல பெறப்பட்டது. மேறபடித் திட்டத்தை செயலபடுத்த வரப்பெறற மூனறு நிறுவனஙகளின ஒப்பந்தப்புளளிகள தொழில நுட்ப தகுதிகளுக்கு ஏறப மெசர்ஸ குஜராத் எனவிரோ புரடெக்சன & இனப்ரா ஸடரக்சர் லிமிடெட் ( M/S Gujarat Environment Protection & Infrasturcture Ltd. Surat) எனற நிறுவனத்திறகு பணி ஆணை வழஙகப்பட்டு தறபோது கட்டுமான பணிகள நடைபெறறு வருகிறது. மேலும் இந்த நிறுவனம் கட்டுமான பணிகள முடிவுறறவுடன 20 வருடஙகளுக்கு திட்டத்தினை செயல படுத்த உத்திரவு வழஙகப்பட்டுளளது.

மேற்படி திட்ட செயலாக்ப்பணிகள் அனைத்தும் முடிவுபெற்று செப்டம்பர் 2010ல் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது. மேற்படி திட்டத்தில் பெறப்பட்ட திடக்கழிவுகளிலிருந்து உரம், எரிபொருள், பிளாஸ்டிக் தயாரிப்புக்கான மூலப்பொருட்கள் மற்றும் செங்கல் ஆகியவை உற்பத்தி செய்யப்படவுள்ளது.

மேற்படி திட்ட செயலாக்கத்திற்கு முதற்கட்டமாக 25 ஏக்கர் நிலத்தினை 20 ஆண்டுகளுக்கு ஒரு ச.மீ க்கு ரூ.1 வீதம் குத்தகை அடிப்படையில் மேற்படி நிறுவனத்திற்கு வழங்க அரசாணை (நிலை) எண்.124 மற்றும் நாள்.5.7.2010ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.2) அனுமதி வழங்கியுள்ளது.


SALEM CORPORATION
Solid Waste Management New Site at Chettichavadi
Construction of infrastructure


SALEM CORPORATION
Solid Waste Management New Site at Chettichavadi
Construction of infrastructure

# நவீன எரிவாயு தகன மேடை

மாண்புமிகு தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 2006–07ம் ஆண்டு சட்டப் பேரவை அறிவிப்பின் அடிப்படையில் பகுதி – II திட்டத்தின் கீழ், ''நவீன எரிவாயு தகன மேடை'' அமைத்திட 11.09.2006ம் தேதிய நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கும் துறையின் 90 எண் கொண்ட அரசாணையின் மூலம் அனுமதியளித்ததின் அடிப்படையில் சேலம் மாநகராட்சிக்குட்பட்ட கோட்டம் எண். 12ல் அமைந்துள்ள காக்காயன் மயானத்தில் அரசு மானியம் ரூ. 20.00 இலட்சம் மற்றும் மாநகராட்சியின் பொதுநிதியின் பங்களிப்பு ரூ. 78.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.98.00 இலட்சம் மதிப்பீட்டில் ''நவீன எரிவாயு தகனமேடை'' (''B'' Type) அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. 23.06.07ம் தேதியன்று அதற்கான தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, 07.09.07ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 26.10.07ல் பணி ஆணை வழங்கப்பட்டது. அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு 07.07.2010முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

இத்திட்டத்தில் கீழ்கண்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

1. தகன மேடை – 2 எண்ணிக்கை , அஞ்சலி மண்டபம், மர இருப்பு அறை ,ஜெனரேட்டர் அறை அலுவலக அறை, முடி எடுக்கும் இடம், கழிப்பிட வசதி ,சாலை வசதிகள் ,ஆம்புலன்ஸ் வசதி வாகனங்கள் சுத்திகரிப்பு நிலையம் , காரிய மண்டபம் , சுற்றுச் சுவர் , அமைவிடத்தில் தேவையான காலி இடங்களில் புல் தரை மற்றும் பூங்காக்கள் அமைத்தல்.

இதில் தனியார் பங்களிப்பாக சேலம் ஜெயராம் கல்வி அறக்கட்டளை மற்றும் வைஷ்யா கல்லூரி ஆகியவற்றின் சார்பாக அஞ்சலி மண்டபம் ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

எரிவாயு தகன மேடை அமைதி அறக்கட்டளையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது

**மொத்த செலவுத் தொகை ரூ. 234.04. லட்சம்**



# சேலம் மாநகராட்சி
# நவீன இறைச்சிக்கூடம்

சேலம் மாநகராட்சி 50வது கோட்டம் மணியனூர் பகுதியில் நவீன இறைச்சிக் கூடம் கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 68.00 லட்சம் மதிப்பீட்டு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் கடிதம் எண். 11183/07 தேதி 21.05.2007ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. (2006–2007 பகுதி இரண்டு திட்ட அரசு மானியம் ரூ.10.00 லட்சமும் மாநகராட்சி பொது நிதி ரூ58.00 லட்சமும் ஆகும்). மேற்படி கட்டிடத்தின் பரப்பளவு 2286 சதுரடி மற்றும் ஆடுகள் தங்குமிடம் கட்டிடத்தின் பரப்பளவு 1056 சதுரடி ஆகும். இந்த புதிதாக கட்டப்பட்டுள்ள நவீன இறைச்சிக் கூடத்தில் கீழ்கண்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

ஆடுகள் தங்குமிடம்,. ஆடுகள் வெட்டுமிடம் – 6 எண்ணிக்கை, ஆடுகள் ஆய்விடம்
ஆடு மாமிசம் உண்ணத் தகுந்தவை என முத்திரையிட்டு வழங்குதல் ,தோல் சேகரிப்பு அறை
இறைப்பை குடல் சேகரிப்பு அறை ,கால்நடை மருத்துவர் அறை , சூரிய ஒளியை பயன்படுத்தி சுடுநீர் , குடிநீர் வசதி ,கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் , மோட்டார் அறை

மேலும் கூடுதல் வசதிக்காக ரூ31.25 லட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்டுள்ள பணிகள் மாநகராட்சி பொது நிதிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

கழிப்பிட வசதி (ஆண்/பெண்) ,பாதுகாவலர் அறை , சுற்றுச்சுவர் ,கான்கிரிட் இன்டர் லாக்கிங் பிளாக் சாலை ,புல்தரை, பூச்செடி, மரம் ,இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடம்

நவீன இறைச்சிக்கூடத்தில் நாள் ஒன்றுக்கு 500 ஆடுகள் வரை வெட்டுவதற்கும் ஆடுகளை வெட்டுவதனால் வரக்கூடிய கழிவு நீரை சுத்திகரிப்பு செய்வ–தற்கு 2 லட்சம் கொள்ளவு கொண்ட சுத்திகரிப்பு தொட்டி கட்டப்பட்டுள்ளது, இந்த சுத்திகரிப்பு நிலையத்தில் பையோ ஓசோலைட் டெக்னாலஜி (Bio-Ozolyte Technology) என்ற நவீன முறையை பயன்படுத்தி சுத்திகரிப்பு செய்திட வழி வகை செய்யப்பட்டுள்ளது. அனைத்து பணிகளும் முழுமையடைந்து 07.07.10 முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**மொத்த செலவுத் தொகை ரூ.94.00 லட்சம்**

